**தேதி :** 12.02.2026 **SC.No. :** 164/2023 PW :16 மருத்துவர்.தர்மராஜ்

**(2, 3, 4, 7, எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. இதர எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் காயம்பட்ட 2 நபர்களின் கைகளிலும், நைலான் கயிறு கட்டப்பட்டதற்கான தடத்தை பார்க்கவில்லை என்றால் சரிதான். அருணாச்சலத்தின் கால்களிலும் நைலான் கயிறு கட்டப்பட்டதற்கான தடத்தை நான் பார்க்கவில்லை. பொதுவாக 80 வயதுக்கு மேல் மேற்பட்ட ஆண், பெண் நபர்களுக்கு எலும்பு முறிவு, ஆஸ்டியோ போரோசிஸ் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். ஆண்களை விட பெண்கள் அதிகமாக பாதிக்கப்படுவார்கள் என்றால் சரிதான். இடுப்பு எலும்பு முறிவதற்கு வாய்ப்புகள் அதிகம் என்றால் சரிதான்.

80 வயதுக்கு மேற்பட்ட நபர்கள் படுக்கையிலிருந்து கீழே விழும் போது நான் பார்த்த எலும்பு முறிவு காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. சிகிச்சைக்கு ஜெகன் என்பவர் அவர்களை அழைத்து வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. அடையாளம் தெரியாத நபர்கள் தாக்கியதாக காயம்பட்ட நபர்கள் என்னிடம் சொல்லியதாக விபத்து பதிவேட்டில் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆனால், கேஸ் சீட்டில் குறிப்பிட்டுள்ளேன். நான் கேஸ் சீட் பார்த்து போலீசார் விசாரணையில் கூறியுள்ளேனா? என்றால் இல்லை. எனக்கு தெரிந்த விபரங்களை சொல்லியுள்ளேன்.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.16 10:40:00 +0530